விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANACU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 22 இதழ் 353
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 4-2-1994

★ அரசியல் தஞ்சம் கோருவோர் தொகையை
கனடா குறைப்பு

(ஒட்டாவா)

கனடாவில் அரசியல் தஞ்சம் கோரிவருபவர்களின் எண்ணிக்கையை அரைவாசியாகக் குறைப்பதற்கு கனடாவின் புதிய லிபரல் கட்சி அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அத்துடன் கனடாவில் குடியேறுவோர் எண்ணிக்கையை ஆண்டொன்றிற்கு இரண்டு

(3-ம் பக்கம் பார்க்க)

யாழ். மீன்பிடி பயிற்சிக்கல்லூரி
ஊழியர்க்கு அரசு மிரட்டல்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மீன்பிடி பயிற்சிக் கல்லூரியில் கடமையாற்றும் ஊழியர்கள் அனைவரும் இடமாற்றம் செய்யப்பட்ட இடங்களுக்கு உடனடியாக செல்லாவிட்டால் அனைவரும் வேலையிலிருந்து நீக்கப்படுவர் என கடற்றொழில் அமைச்சு எச்சரிக்கை செய்துள்ளது.

இதற்கான பதிவுத் தபால் கடிதங்கள் இந்த ஊழியர் அனைவருக்கும் அண்மையில் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டுள்ளன.

(4ம் பக்கம் பார்க்க)

வட-கிழக்கு போரை கைவிட்டு
ராணுவத்திலிருந்து தப்பிஓடிய
படையினரை தேடி வலைவிரிப்பு!
பெருமளவு சிப்பாய்கள் விரைவில் கைதாவர்!!

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதியில் நடைபெறும் யுத்தத்தைக் கைவிட்டு இராணுவத்திலிருந்து தப்பிஓடிய ஆயிரக்கணக்கான படையினரைக் கைதுசெய்வதற்காக அரசு வலைவிரித்துள்ளது. இவர்கள் அனைவரையும் உடனடியாகக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரசு படை அதிகாரிகளுக்கும் பொலிசாருக்கும் இப்போது அவசர உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது. ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் விசேஷ பணிப்புரை ஒன்றின் பேரிலேயே இதற்கான உத்தரவுகள் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா இராணுவப்படையிலிருந்து தப்பி ஓடிய படையினர் பலர் குற்றச்செயல்களிலேயே ஈடுபட்டு வருவதாக அரசுக்கு இரகசியத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இதேவேளையில் அண்மையில் கைதுசெய்யப்பட்ட இராணுவ சிப்பாய் ஒருவருக்கு இலங்கையின் சகல பகுதிகளுக்குமான சமாதான நீதவான் பதவி வழங்கப்பட்டிருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. யுத்தமுனையில் கடமையாற்றிய இந்த சிப்பாய் படையிலிருந்து தப்பி ஓடி வந்தவர் என தெரிவிக்கப்பட்டது.

(3-ம் பக்கம் பார்க்க)

தடை உத்தரவு நீங்கி
‘நொமியன மினிசு’
இன்று திரைக்கு வருகிறது

(கொழும்பு)

‘நொமியன மினிசு’ (இறவாத மனிதர்கள்) என்ற சிங்களத் திரைப்படத்தை திரையிடுவது தொடர்பாக தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் மீது பிறக்கப்பட்ட

(3ம் பக்கம் பார்க்க)

மலேரியா மருந்துகளுக்கு
பலத்த தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதார பிராந்தியத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகள் பலவற்றில் மலேரியா நோய்க்கான ‘குனோ

(3-ம் பக்கம் பார்க்க)

பல்கலைக்கழகங்களின்
வேந்தராக பேராசிரியர்
நடராசா நியமனம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா பல்கலைக்கழகங்களின் வேந்தராக பேராசிரியர் நடராசா மீண்டும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் யாழ். பல்கலைக்கழக உபவேந்தராக நியமிக்கப்பட்டுள்ளதாக நேற்றைய ஈழநாட்டில் வெளியான செய்தி தவறாகும்.

இம்மாதம் 10ம் திகதியிலிருந்து

(3-ம் பக்கம் பார்க்க

இலங்கை அரசுக்கு எதிராக ஐரோப்பாவில் பிரசாரம்
லண்டன் தமிழ் குழுக்கள் ஏற்பாடு

(லண்டன்)

இலங்கையின் சுதந்திர தினமான இன்று முதல் இலங்கை அரசுக்கு எதிராக ஐரோப்பிய நாடுகள் முழுவதும் மிகப் பெரிய அளவிலான பிரசாரங்களை லண்டனிலுள்ள தமிழ் அமைப்புகள் மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளன.

இலங்கை அரசும், இராணுவமும் இலங்கை தமிழ்

(4ம் பக்கம் பார்க்க)

கிழக்கில் நீதியான தேர்தலை நடத்தும் சூழ்நிலை இல்லை
படை அதிகாரி தகவல்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் அரசு ஒரு நியாயமான தேர்தலை நடாத்தக்கூடிய சூழ்நிலை இன்னும் அங்கு உருவாகவில்லை இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது கடமையாற்றி வரும் இராணுவ அதிகாரி ஒருவர் கொழும்பில் பத்திரிகையாளரிடம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தேர்தல்

(4-ம் பக்கம் பார்க்க)

பயங்கரவாத பிரச்சினையே
டி. பி. மீண்டும் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்சினையே இன்று நாட்டை எதிர்நோக்கியுள்ள முக்கிய சவாலாகும். இப்பயங்கரவாதப் பிரச்சினையை ஒழிப்பதற்கு சகல சமூகங்களும் ஐக்கியத்துடன் செயற்படவேண்டும் என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க மீண்டும் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக்கூட்

(4-ம் பக்கம் பார்க்க

மட்டக்களப்பில் ராணுவம் குவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ஏராளமான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதுடன் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் சோதனை நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

உள்ளூராட்சித் தேர்தலையொட்டியே அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்

(3-ம் பக்கம் பார்க்க)

மன்னார் மாவட்டத்தில்
92,000 தமிழர் பலவந்தமாக படையினரால் வெளியேற்றம்!

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் 1990ம் ஆண்டுக்குப்பின் 92 ஆயிரம் தமிழ் மக்கள் பலவந்தமாக தமது சொந்த வீடுகளிலிருந்து இராணுவத்தினரால் வெளியேற்றப்பட்டுள்ளனர். இவ்வாறு கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று தனது கட்டுரையில் தெரிவித்துள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

16, கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் 3½ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: பரணி மருந்தகச் சாலை, 456, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (எ-3798)

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் எழுதிய "மாணவர்க்கேற்ற மாண்புறு கதைகள்" பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும். சி-754

மீண்டும் ஆரம்பம்

"ராஜு போட்டோ ரெக்னிக்" மீண்டும் திருத்த வேலைகளை ஆரம்பித்துள்ளது. கமெரா, பிளாஷ்கண், பைனகுலர்ஸ், வீடியோ கமெரா போன்றவை சிறந்த முறையில் வழமைபோல் திருத்திக் கொடுக்கப்படும். NS நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி (மேல்மாடி கன்னாதிட்டி சந்திக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-751)

1994ம் ஆண்டில் பலாபலன்கள்

எல்லா ராசிகளுக்கும் பிறப்பு கூட்டு எண்களுக்கும் பொது, விசேட சிறப்புப் பலாபலன்கள் உள்ளன. சக்தி மாஸ்டர் எழுதிய நூலைக் கேட்டு வாங்கிப் படியுங்கள். எங்கும் கிடைக்கும் சோபிதா யாழ். நகர். (சி-773

பத்திரங்கள் முடிந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மேலதிக பதிவாளர் திணைக்களத்தில் 1954ம் ஆண்டு ஆவணி மாதத்திற்கும் பின்னர் பிறப்புச் சான்றுப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்வதை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிகப் பதிவாளர் தெரிவித்துள்ளார். -162-

---

சட்டவிரோத கடவுச் சீட்டுடன்

வெளிநாடுகள் செல்வோரை கண்டுபிடிக்க நடவடிக்கை

(கொழும்பு)

சட்டவிரோத கடவுச்சீட்டுகளின் உதவியுடன் வெளிநாடு செல்ல முயல்வோரைக் கண்டுபிடிக்கவென கட்டுநாயக்கா விமான நிலையத்தில் விசேட பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

குடிவரவு குடியகல்வு திணைக்களம் இதை ஏற்படுத்திச் செய்துள்ளது. போலிக் கடவுச்சீட்டு வைத்திருப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

சகல ஆவணங்களுடனும் கடவுச்சீட்டுப்பெற விண்ணப்பிப்போர் ஒரு வார காலத்தில் அதனைப் பெற ஏற்பாடு இருக்கையில் போலிக் கடவுச்சீட்டுகள் பெற தேவையேற்படாது எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடவுச்சீட்டு வழங்கப்படுவதனூல் குடிவரவு குடியகல்வு திணைக்களம் 45 கோடி ரூபாவை கடந்த ஆண்டு வருமானமாகப் பெற்றது. கே-சீ

திறந்த பல்கலைக்கழகம்

(யாழ்ப்பாணம்)

திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையம் தொடர்ந்து செயல்படுவதற்கு கொழும்பு திறந்த பல்கலைக்கழகமும் யாழ். உயர் மட்ட முக்கியஸ்தர்களும் எடுத்த முயற்சியின் தொடர்ந்து யாழ். பிராந்திய நிலையம் இயங்கும் என உறுதியாகிறது.

யாழ். பிராந்திய நிலைய மாணவர் நலன்புரி அமைப்பு சகல உறுப்பினர்களையும் ஆண்டு 1990 இற்கு பின் கற்கை நெறிகளுக்கும் பதிவு செய்த சகல மாணவர்களையும் புதிதாக பதவி ஏற்றுள்ள யாழ். பிராந்திய நிலைய இயக்குநர் சு. ஆ. ஞானேந்திரன் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2-30 மணி யாழ். பிராந்திய நிலையத்தில் சந்திக்கும்படி வேண்டப்படுகின்றனர். (ஐ)

மரமுந்திரிகை நாற்றுகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லை மாவட்ட விவசாயப் பகுதியினர் 10 ஏக்கர் பண்ணைத் திட்டத்தில் போடப்பட்டிருந்த மரமுந்திரிகை நாற்று மேடையில் இருந்து மரமுந்திரிகைக் கன்றுகளை இலவசமாக விநியோகித்து வருகின்றனர்.

இம்மாவட்டப் பாடசாலைகளிலும், ஒட்டிசுட்டான் கமநல சேவை நிலையத்தினூடாக அப்பகுதி மக்களிடமும் இக்கன்றுகள் விநியோகிக்கப்படுகின்றன.

இப்பண்ணைத் திட்டத்தில் இதுவரை 2000 நல்லின தென்னம்பிள்ளைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் மக்கள் நல்லின மரங்களை வளர்ப்பது அதிகரிக்கிறதென்பது குறிப்பிடத்தக்கது.

9-ம் ஆண்டு நினைவஞ்சலி

நாராயணசாமி ராமசாமி

தோற்றம்: 3 - 4 - 1920

மறைவு: 4 - 2 - 1985

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் அன்பின் திருவுருவாய் வாழ்ந்து எம்மை பாசத்துடன் காத்து ஈசனடி சேர்ந்த எம் அன்புத் தெய்வமே.

உங்கள் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர், மைத்துனர்கள்.

கேதீஸ்வரன் ஸ்ரோர்ஸ்,
39/2, 119, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(எ-2826)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1994-02-28-ம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

பயிராக்கவியலில் தற்காலிக உதவி விரிவுரையாளர்

சம்பள அளவுத்திட்டம்

தற்காலிக உதவி விரிவுரையாளர்

ரூபா 5,270/- (நிலையானது) மாதமொன்றுக்கு.

இத்துடன் நிலுவையிலுள்ள வேலை நிறைவேற்றப்படியாக 1994 டிசம்பர் 31-ம் திகதி வரை சம்பளத்தில் 25 சத வீதத்திற்கு சமமான தொகை செலுத்தப்படும்.

1993 மே 12-ம் திகதிய 9/93 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப மாதாந்தப்படியாக 600/- ரூபா செலுத்தப்படும்.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் விபரங்களையும் 20/- ரூபாவை பல்கலைக்கழகத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது நிதிக் கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தாபனக்கிளை) அலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். படிவங்களையும் விபரங்களையும் தபால் மூலம் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர்/நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக்கட்டளை/தபாற்கட்டளையுடன் 23X10 ச. மீ. அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
1994 - 01 - 19.

(எ-3802)

மருந்து தட்டுப்பாடு

(நெல்லியடி)

மந்திகை மருத்துவமனையில் மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகிறது; (160)

கிரிக்கெட்

மத்தியஸ்தர் வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம் புதிய மத்தியஸ்தர்களுக்கான விரிவுரைகளை எதிர்வரும் 6ம் திகதி ஞாயிறு முதல் காலை 10 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடாத்தவுள்ளது. இவ் விரிவுரைகள் பிரதி ஞாயிறு தோறும் நடைபெறும் என சங்க செயலாளர் திரு. எஸ். விமலதாஸன் தெரிவித்துள்ளார்.

யாழ். வர்த்தகர் சங்கம் விடுக்கும்

முக்கிய அறிவித்தல்

இன்று

04 - 02 - 94 வெள்ளிக்கிழமை

பிற்பகல் 3-00 மணிக்கு

யாழ். வர்த்தகர் சங்கப் பணிமனையில்

சகலதுறை வர்த்தகர்களுக்கும்

ஓர் முக்கிய கலந்துரையாடல்

நடைபெறவுள்ளது.

முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்துகொள்வார்கள்.

★ இக்கூட்டத்தில் வர்த்தகர்களின் மிக முக்கியமான விடயங்கள் பல கலந்துரையாடவேண்டி இருப்பதால் கூட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து சகலதுறை வர்த்தகப் பெருமக்களும் தவறாது கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

நன்றி.

யாழ். வர்த்தகர் சங்கம்.

(எ-3804)

அரசினர் பொது வைத்தியசாலை

யாழ்ப்பாணம்.

அமைய / ஆண், பெண்

வெற்றிடங்கள்

சுத்திகரிப்புத் தொழிலாளிகள்

இவ்வைத்தியசாலையில் அமைய/ஆண் பெண் சுத்திகரிப்புத் தொழிலாளிகள் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தகைமைகள்

   குறைந்தது 8-ம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2. 10-02-94ம் திகதியன்று 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 40 வயதிற்கு உட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பதாரர்கள் இவ்வைத்தியசாலையிலிருந்து 5 மைல் சுற்றுவட்டலில் வசிப்பவராக இருந்தால் முன்னுரிமை வழங்கப்படும்.

"விண்ணப்பங்கள் எமது பணிமனையில் 10 - 02 - 94 வரை ஏற்றுக்கொள்ளப்படும்

விண்ணப்பதாரர்கள் பின்பு என்னால் அறிவிக்கப்படும் திகதியில் எமது பணிமனையில் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றவேண்டும்.

பணிப்பாளர்
(வைத்தியகலாநிதி செல்வி. என். கனகரட்டினம்)

திகதி: 03-02-94 (ஏ-3805)

அருள்வாக்கு

காற்றில் பறந்தோடும் காய்ந்த சருகு போல் நீ வீண் கர்வம் இல்லாதவனாக இரு.

– ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்

நமது நோக்கு

விடுதலை நாளா?

இலங்கையின் கரையோரப் பகுதிகளை டச்சுக்காரரிடமிருந்து பிரித்தானியர் பெற்றனர்; சில ஆண்டுகளுக்குப் பின் கண்டியரசையும் கைப்பற்றி, அடங்காப் பற்றாக இருந்த வன்னியையும் கைப்பற்றி ஆண்டு வந்தனர்.

போர்த்துக்கேசர் இங்கு வந்தபோது மூன்று சுதந்திர அரசுகள் இருந்தன என்பது வரலாற்று உண்மை. ஆனால், நிர்வாக வசதிக்காக, அடிமைகளாகிவிட்ட சிங்களவர்களையும், தமிழர்களையும் ஒற்றை ஆட்சிக்குள் கொண்டுவந்தனர் பிரித்தானியர்!

1948 பெப்ரவரி 4ம் திகதி சுதந்திரம் வழங்கிய போது, அதே ஒற்றை ஆட்சியையே விட்டுச் சென்றனர்.

சோல்பரியின் அரசியல் திட்டத்தின்படி, இந்த ஒற்றையாட்சியில் சகல இன மக்களும் ஆட்சி உரிமை பெறுவார்கள் என அவர்கள் எண்ணிக் கொண்டிருந்தனர்.

சட்டத்தில் 29வது பிரிவில் இனங்கள் ஒன்றை ஒன்று அடிமைப்படுத்தமாட்டா என்ற அரசியல் நீதியில் நம்பிக்கை வைக்கப்பட்டது.

நடந்தது என்ன? அரசியல் நீதி காற்றில் பறக்க விடப்பட்டது. தமிழ் மக்கள் பிரித்தானிய எஜமானர்களிடமிருந்து சிங்கள எஜமானர்களின் கைக்கு மாற்றப்பட்ட கதைதான் நடந்தது.

இருந்த உரிமைகள், படிப்படியாகப் பறிக்கப்பட்டன; நிலங்கள் அரச குடியேற்றங்களால் பறிக்கப்பட்டன. மொழிக்கு ஆட்சியுரிமை மறுக்கப்பட்டது. தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகள் ஆகினர். யாழ். மாவட்டமோ, மூன்றாவது உலகின் நிலைக்கும் கீழாகிவிட்டது என்ற கேலிக்குரியதாகிவிட்டது!

இந்த நிலையில், இதை சுதந்திரதினம் மகிழ்ச்சியோடு கொண்டாடும் வேளையில், எமது மக்கள் கரிநாள் என்ற எண்ணத்தோடு, விடுதலைப்போரை வீறுடன் தொடர நினைப்பதில் என்ன தவறு?

உலகில் பேரரசுகளின் பின் நாடுகளின் எல்லைகளை மாற்றி அமைக்கப்பட்ட வேளைகளில் பல இன மக்கள் ஒன்றுகூடி வாழ்வார்கள் என்ற நினைப்பில் ஆட்சி முறைகள் ஏற்படுத்தப்பட்டன.

ஆனால், இன்றோ, அந்த ஆட்சிப் பரிசோதனைகள் வெற்றியளிக்காது, நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன. நமது விடுதலைப் போருக்கும் வலுக்கூட்டுகின்றன!

சூரியகந்த எலும்புக்கூடுகளின் பின்னணி

பல திடுக்கிடும் தகவல்கள்!

(கொழும்பு)

சூரியகந்த மனித புதைகுழிகளில் மேலும் 300க்கும் மேற்பட்ட சடலங்களின் எலும்புக் கூடுகள் கிடைக்கலாம் என்றும் அத்துடன் அந்த இடத்தில் 40 பிக்குகளின் சடலங்களும் புதைக்கப்பட்டிருப்பதாகவும் புதிய தகவல்கள் கிடைத்துள்ளன.

சூரியகந்த எலும்புக்கூடுகள் விவகாரம் தொடர்பாக கொழும்பு பத்திரிகையொன்று மேலும் பலதகவல்களை வெளியிட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: எம்பிலிப்பிட்டிய மத்திய மகாவித்தியாலயத்தின் அதிபர் தயானந்தலப்பத்தி, 1989-ம் ஆண்டில் கலப்பத்தியின் மகனும் அதே பாடசாலையில் உயர்தர வகுப்பில் கல்வி கற்று வந்துள்ளார் இப்போது இவர் இராணுவத்தில் உள்ளார். இந்தப்பாடசாலையில் அதிபரின் மகனுக்கு சார்பான ஒரு கோஷ்டியொன்றும் அவர்களுக்கு எதிராக இன்னொரு மாணவர் கோஷ்டியொன்றும் இயங்கியுள்ளது அதிபரின் மகனுக்கும் சப்ரமுவா மாகாண சபை உறுப்பினர் ஒருவரின் மகளுக்கும் இடையில் இருந்த காதல் தொடர்பு பற்றிய கடிதம் எதிர் கோஷ்டிக்கு கிடைத்த போது அதனை அவர்கள் அம்பலப்படுத்தியுள்ளனர். இதனால் இரு கோஷ்டிகளுக்கு மிடையில் கோஷ்டி மோதல் ஏற்பட்டது.

இதேவேளை பாடசாலையில் நடந்த வேறு சில பிரச்சினைகள் காரணமாக எதிர்க்கோஷ்டி மாணவர்கள் உட்பட பல மாணவர்கள் பகிஷ்கரிப்பு போராட்டம் நடத்தியுள்ளனர். இந்த மாணவர்களுடன் ஏற்கனவே மனது பிரச்சினைகளில் வெறுப்படைந்திருந்த ஆளும் கட்சி செல்வாக்கு மிக்க அதிபர் தயானந்த கலப்பத்தி இத்தருணத்தை பயன்படுத்தி இம்மாணவர்கள் ஜே. வி. பி. எனமுத்திரை குத்தி இராணுவத்திடம் காட்டிக் கொடுத்துள்ளார். இதனால் அதனுடன் தொடர்புடைய சகல மாணவர்களையும் 1989 இறுதிப்பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் கடத்திச் சென்றுள்ளனர் மாணவர்களின் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகள் எங்கே என பிடித்துச் சென்றவர்களிடம் விசாரித்த போது அப்படியாரையும் நாங்கள் கொண்டு செல்லவில்லை என இராணுவத்தினரும் பொலிஸாரும் மறுத்துவிட்டனர்.

எம்பிலிப்பிட்டிய மத்திய மகாவித்தியாலயத்தில் அந்தக் காலப்பகுதியில் கடமையாற்றிய பெயர் குறிப்பிட விரும்பாத ஆசிரியர் ஒருவர் இது பற்றிக் குறிப்பிடும்போது கோஷ்டிமோதல் நடந்தபோது பாடசாலை நிர்வாகம் அச்சம்பவத்தை விசாரிக்கவென்று ஒழுங்குக்குழு ஒன்றினை நியமித்தது குழுவுடன் என்னையும் நியமித்தனர் நாங்கள் விசாரணை செய்து கொண்டிருந்த போது பிரச்சினைக்குரிய [illegible] காலப்பகுதியாகையால் பாடசாலைகள் அடிக்கடி மூடப்பட்டன. இதனால் விசாரணையை ஒழுங்காக நடாத்த முடியவில்லை. இப்படியிருக்கும் போது திடீரென்று குறிப்பிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்கள் காணாமல் போக ஆரம்பித்தனர்' என்று தெரிவித்துள்ளார்.

மாணவர்கள் கொலை செய்யப்பட்ட விபரங்கள் வெளிவரத் தொடங்கவே அதிபர் கலப்பத்திமிரட்டல் தொனியிலான எச்சரிக்கையை விடுத்துள்ளார். ஒரு கட்டத்தில் இவர் தன்னை சிக்கலில் மாட்டிவிட்டால் சகலரையும் காட்டிக் கொடுப்பதாக ஆளும் கட்சி மேல்மட்ட அரசியல்வாதிகளை மிரட்டியுள்ளார்.

இச்சம்பவத்துடன் வேணல் வியனவே மற்றும் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சருமான நந்தா மத்யு போன்றோருக்கும் தொடர்புள்ளது என [illegible] தெரிவித்துள்ளன.

இவையாவையும் வைத்துப் பார்க்கும்போது சூரியகந்த சம்பவம் அதிபர் கலப்பத்தி சம்பந்தப்பட்ட சம்பவம் தான் என்பது அச்சம்பவத்தில் தொடர்புள்ள குறிப்பிட்ட மாணவர்கள் மட்டுமே காணாமல் போனதிலிருந்து தெளிவாகிறது.

அதேபோல் சம்பந்தப்பட்ட மாணவர்களின் பிரேதங்கள் கண்டு பிடிக்கப்பட்டவை என்பது பெற்றோர்கள் குறிப்பிட்ட உடைகள் மற்றும் அடையாளங்கள் என்பவை குழிகளிலிருந்து மீட்கப்பட்ட பிரேதங்களுடன் பொருந்துவதை வைத்து அவதானிக்க முடிகிறது.

பெற்றோர்களினது சாட்சிமூலத்திலிருந்து இம்மாணவர்கள் இராணுவத்தினரால் தான் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பது புலனாகிறது.

பிரேதங்களில் காணக்கிடைத்த கழுத்து நெரிக்கப்பட்ட அடையாளங்கள் கைகட்டப்பட்ட அடையாளங்கள் துணிகளில் காணப்பட்ட இரத்த அடையாளங்கள் என்பன கொலைசெய்யப்படுவதற்கு முன் மிகவும் மோசமான சித்திரவதை செய்யப்பட்டிருப்பார்கள் என்றும் அனேகமான உடல்கள் நிர்வாணமாக போடப்பட்டிருக்கிறது என்றும் தெரியவருகிறது..

கண்டெடுக்கப்பட்ட பிரேதங்கள் கிட்டத்தட்ட 17 க்கும் 29 க்கும் உட்பட்ட வயதையுடையவர்களாக இருக்கலாம் என்று நீதவான் உட்பட ஏனையோரும் கருதுகிறார்கள் அதேபோல் காணாமல்போன மாணவர்களது வயதும் அதனுடன் பொருந்துகிறது. -ஈ

பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். புதிய கல்வி நிலையத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை பி. ப. ஒரு மணிக்கு அதிபர் திரு. த. அம்பிகைபாகன் தலைமையில் நீராவியடி நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. கி வேலாயுதம் கலந்து கொள்வார். மாணவர்களின் பட்டிமண்டபம், கவியரங்கு கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். (சி

இராசிபலன்

4 - 2 - 1994

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு தை 22)

நவமி பி. இ. 1-43 வரை, விசாகம் பி.ப. 2-20 வரை, இராகுகாலம் காலை 11-05 முதல் 12-35 வரை. சுபநேரம் காலை 6-35 முதல் 8-05 வரை.

மேடம்: கஷ்டம், பொருள் இழப்பு, மறதி.

இடபம்: காரிய சித்தி, தொழில் வருவாய், பாராட்டு.

மிதுனம்: கண்ணியம், நண்பர் சகாயம், தாயார் உதவி.

கடகம்: மனக்குறை, கவலை துயர், அலைச்சல்.

சிம்மம்: வீண் வம்பு, குறை கேட்டல், தொழில் நஷ்டம்.

கன்னி: பயண நன்மை, இலாபம், மனச்சந்தோசம்.

துலாம்: விரக்தியடைதல், அயலவர் பகை, தனவிரயம்.

விருச்சிகம்: புதிய முயற்சி, தெய்வீகச்செலவு, அறிஞர் அறிவுரை.

தனுசு: தொழில்குரோதம் கண்வலி, அமைதி குன்றல்.

மகரம்: வெளியார் உதவி, மாமனார் நன்மை, விடா முயற்சி.

கும்பம்: கடமை உணர்வு, புரியாத உறவு, விருந்துண்ணல்.

மீனம்: தடுமாற்றம், அதிகாரிகள் பயம், சஞ்சலம்.

— ஜோஸ்யர்

தடை உத்தரவு

1ம் பக்கத் தொடர்ச்சி)

தடை உத்தரவை விசாரணையின் பின்னர் கொழும்பு மாவட்ட நீதிபதி ஏ. எம். சோமவன்ச நேற்று நீக்கியுள்ளார்.

இதையடுத்து இத்திரைப்படம் ஏற்கனவே அறிவித்தபடி இன்று முதல் திரையிடப்படுமென தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கு பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு இத்திரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகாவினால் இத்திரைப்படம் தயாரிக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

சுமார் 70 லட்சம் ரூபா செலவில் இத்திரைப்படம் தயாராகியுள்ளது (ஈ இ)

அரசியம் தஞ்சம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லட்சத்து 50 ஆயிரமாக வைத்திருக்கும் தற்போதைய முறையை தொடர்ந்தும் அமுல் செய்வதெனவும் கனடா அரசு அறிவித்துள்ளதாம்.

இதேவேளையில் பிரிந்திருக்கும் குடும்பங்கள் மீண்டும் இணைந்து கொள்வதற்கும், கனடாவின் பொருளாதாரத்திற்கும் தொழில் துறைக்கும் தேவைப்படும் வெளிநாட்டவர்களை அனுமதிப்பதற்கும் முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் குடிவரவு அமைச்சர் தெரிவித்துள்ளார். -ஈ-இ

பல்கலைக்கழகங்களில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்துவரும் ஐந்து வருடங்களுக்கு வேந்தராக இவர் பணிபுரிவார் என தெரியவருகிறது.

யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா இப்பதவியிலிருந்து மார்ச் மாதத்தில் ஓய்வு பெறவுள்ளார்.

இப்பதவிக்கு புதிதாக ஒருவரைத் தெரிவு செய்வதற்கான பெயர்ப்பட்டியல் இதுவரை யாழ். பல்கலைக்கழகத்தால் திருத்தி அனுப்பிவைக்கப்படவில்லையென யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு. பரமேஸ்வரன் தெரிவித்தார்.

(162-இ)

வட — கிழக்கு போரை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தைச் சேர்ந்த கனிஷ்ட நிலை படையினரே அதிகளவில் யுத்தமுனையில் இருந்து தப்பியோடுகின்றனர். இதன் பின் இவர்கள் பலவிதமான குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றனர் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாட்டின் பல பகுதிகளில் உள்ள கொள்ளைக் கோஷ்டியினருடன் இணைந்து இவர்களில் ஒரு பிரிவினர் வழிப்பறிகளில் ஈடுபடுவதாகவும் வீடுகளை உடைத்து கொள்ளையிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இன்னொரு பிரிவினர் பிரபல அரசியல் வாதிகளின் துணையுடன் பாதுகாப்புத் தேடிக்கொண்டு அரச பதவிகளில் அமர்ந்துள்ளதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்திலிருந்து தப்பி ஓடும் படையினர் மூலம் முப்படையினருக்கும் இப்போது பெரும் பிரச்சினை எழுந்துள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

படையிலிருந்து தப்பி ஓடுவோர் சட்டப்படி இராணுவ நீதிமன்றம் ஒன்றில் நிறுத்தப்பட வேண்டியவர்கள்.

இராணுவத்திலிருந்து விலகிச் செல்வோருக்கு பொது மன்னிப்பு வழங்குவது குறித்து தாம் ஆராய்ந்து வருவதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜெரி டி. சில்வா அண்மையில் தெரிவித்துள்ளார்.

ஆனால் படையிலிருந்து தாமாகவே விலகிச் செல்வோருக்கு மாத்திரமே இந்த பொதுமன்னிப்பு பொருந்தும். படையை விட்டு தப்பி ஓடுவோருக்கு இது பொருந்தாது என இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். -இ

மலேரியா

1-ம் பக்கத் தொடர்ச்சி

ரோகுயின்', 'பிறிமாக்குயின்' ஆகிய குளிசை மருந்துகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவிவருகின்றது.

யாழ். சுகாதார திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியத்திற்கு கொழும்பிலுள்ள மத்திய மருந்துக்களஞ்சியத்திலிருந்து இந்த மருந்துக் குளிசைகள் அனுப்பி வைக்கப்படாமையினால் இத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

-72-இ

மட்டக்களப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தேர்தலை ஒட்டி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொலிஸ் இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்ட முக்கியமான மாநாடு ஒன்று மட்டக்களப்பில் அண்மையில் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் மட்டக்களப்பு பகுதியில் கோவில் போரதீவு, பெரிய போரதீவு, முனைத்தீவு ஆகிய தமிழ்க் கிராமங்கள் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் கூறுகின்றன.

இப்பகுதி மக்கள் அனைவரும் பெரியபோரதீவு காளி கோவிலடியில் வைத்து விசாரிக்கப்பட்டனர். ஒருவர் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சாமித்தம்பி பரமானந்தம் (37 வயது) என்பவரே படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவராவார். ஈ-இ

இன்று

(யாழ்ப்பாணம்)

திருநீலகண்ட நாயனார், தாயுமான சுவாமிகள் குருபூசை தினவிழா இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மெய்கண்டதேவர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. -இ

0 0

(கொழும்புத்துறை)

யாழ் புனிதபத்திரிசியார் கல்லூரி ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான இல்ல விளையாட்டுப் போட்டிகள் இன்று பிற்பகல் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும்.

(154)

போரூட் பிரதிநிதிகள்

மேலதிக அரச அதிபர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வருகைதந்த போரூட் ஸ்தாபனப் பிரதிநிதிகள் நேற்றுக்காலை யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரை அவரது பணிமனையில் சந்தித்தனர்.

கடந்த காலத்தில் போரூட் ஸ்தாபனத்தால் வலி-மேற்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவந்த நிவாரணப் பணிகள் பற்றியும், தொடர்ந்து மேற்கொள்ளப்படவேண்டிய நிவாரணங்களுக்கான திட்டங்கள் பற்றியும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டதாகத் தெரிய வருகிறது.

கடந்த காலங்களில் கடற்றொழிலில் ஈடுபட்டு வருவோருக்கு மீன்பிடிவலைகள் மற்றும் உபகரணங்களை போரூட் வழங்கி வந்துள்ளதாகவும் இதை மேலும் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் பேற்கொள்ளப்பட்டதாக மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

அத்துடன் விவசாயிகளின் நன்மைகருதி யாழ் மாவட்டத்தில் விதைவங்கி ஒன்றை ஆரம்பிப்பதற்கான உதவிகள் வழங்கப்பட வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது போரூட் ஸ்தாபன யாழ் மாவட்ட பணியாளர்களுடன் கொழும்பிலிருந்து வருகைதந்திருந்த நிகழ்ச்சி அதிகாரி எம். எவ். மக்கீனாரும் கலந்து கொண்டார். (162இ)

500 சிறைக் கைதிகளுக்கு விடுதலை

(கொழும்பு)

இலங்கையின் 46வது சுதந்திரதினத்தை முன்னிட்டு இன்று ஐந்நூறு சிறைக்கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படவுள்ளது.

நீதி அமைச்சின் சிபார்சின் பேரில் ஜனாதிபதி இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார். (க-இ)

இந்தியாவுக்கான ‘விசா’ வழங்கல் மறுசீரமைப்பு

(கொழும்பு)

இலங்கையிலிருந்து பெருமளவினர் இந்தியாசெல்ல விரும்புவதால் விசா வழங்குவதற்கான முறையை சீரமைப்பதற்காக கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

விசா வழங்குவதற்கு வேண்டிய பரிசோதனைகள் விண்ணப்பம் செய்யும் இடத்தைப் பொறுத்து கொழும்பிலோ அல்லது கண்டியிலோ மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது. க-இ

இலங்கை அரசுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கு எதிராக மேற்கொண்டுவரும் அடக்குமுறைகளையும், மனித உரிமை மீறல் செயல்களையும், உலகநாட்டு மக்கள் நன்கு உணர்ந்து கொள்ளும் முகமாகவும், விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாகவும் இந்த அமைப்புகளின் பிரசாரம் அமைந்திருக்கும்.

இலங்கையில் தற்போது நிலவிவருவது இனப்பிரச்சினைதான் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கூறுவதுபோல் இலங்கையில் இருப்பது பயங்கரவாதப் பிரச்சினையல்ல. இதை பெரும்பாலான சிங்கள மக்களும் ஒப்புக்கொள்வார்கள்.

இலங்கையில் இருப்பது இனப்பிரச்சினைதான் என்பதை இலங்கை அரசு ஒப்புக்கொண்டு இதற்கான தனது தீர்வுத்திட்டத்தை தெரிவிப்பதுடன், முறையான யுத்த நிறுத்தத்தை முதலில் அமுல்படுத்தினால் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளத் தயாராகவே இருக்கின்றார்கள் என்ற அடிப்படையில் இக்குழுக்கள் தமது பிரசாரங்களை தொடர்ச்சியாக மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளன.

இக்குழுக்களின் முதல் கட்டப் பிரசாரம், இன்று வெள்ளிக்கிழமை லண்டனில் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.

இதைத்தொடர்ந்து கனடா ஜேர்மனி, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, நோர்வே மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளிலும், இலங்கை அரசுக்கெதிரான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட இருப்பதாக தமிழ் அமைப்புக் குழுக்களின் பிரமுக பேச்சாளர் ஒருவர் கடந்த வாரம் லண்டனில் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார். -வி-இ-இ

பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்)

எதிர்வரும் மார்ச் மாதம் 19ம் திகதி நடைபெறவிருந்த கூட்டுறவுப் பரிசோதகர்கள் தெரிவுக்கான போட்டிப் பரீட்சை தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

இப் பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படுமென யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். 162-இ

கிழக்கில்

1ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி அந்த இராணுவ அதிகாரி மேலும் தெரிவிக்கையில்; கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடாத்தவிருப்பது அரசின் முட்டாள்தனமான ஒருசெயல் இத்தேர்தல் நடைபெறுவதினால் எங்களுடைய லீவுகள் ரத்துச் செய்யப்படுவது தான் மச்சம்.

தேர்தல் வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகிலும் எமது இராணுவ முகாம்கள் இவற்றுக்கு அருகிலும் விடுதலைப் புலிகளின் எச்சரிக்கை சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கின்றன என்று அந்த அதிகாரி கூறியுள்ளார். (வி-சி-இ

பயங்கரவாத

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டுத்தாபனத்திற்கு நேற்றுபிற்பகல் வழங்கிய விசேட பேட்டியிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நாட்டின் இறைமை, ஐக்கியம் ஒருமைப்பாடு ஆகியவற்றை பேணிப்பாதுகாப்பதற்கு சகலரும் ஒன்றுபட வேண்டும்.

ஐக்கிய இலங்கை ஒன்றை கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைக்கு மக்கள் பூரண ஆதரவு நல்க வேண்டும் என்றார். (க-இ

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/B

தமிழர்மீதான தாக்குதலை

அரசு நியாயப்படுத்த முயற்சி

மெதடிஸ்த குழு உறுப்பினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்)

தமிழ்மக்கள் குடியிருப்புகள் மீது அரசு மேற்கொண்டுவரும் கண்மூடித்தனமான விமான மற்றும் ஷெல் தாக்குதல்கள் குறித்து அரச தரப்பினர் பல்வேறு நியாயங்களை கூறி அவற்றை நியாயப்படுத்த முயல்வதாக யாழ்ப்பாணத்தில் தற்போது தங்கியுள்ள மெதடிஸ்த திருச்சபை குழுவினருள் ஒருவரான திரு. டுவிப் பெர்ணண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: தமிழ் பகுதியில் தேவாலயங்கள் மற்றும்பொதுஇடங்களில் அரசபடையினர் மேற்கொண்டுவரும் தாக்குதல் சம்பவம் குறித்து அரச தரப்பினரிடம் காரணம் வினவியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். வந்த தமது குழுவினர் இவ்விஜயம் பற்றி அரச தரப்பினருடன்பேச்சுநடாத்தவில்லையென்றும் சகல மதப் பிரதிகளுடன் மட்டுமே பேச்சு நடாத்தப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இக்குழுவினர் நேற்று வடமராட்சியில் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரடியாகப்பார்வையிட்டனர்.

இக்குழுவினர் விடுதலைப்புலிகளுடனும் பேச்சு நடாத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 8ம் திகதி இக்குழுவினர் கொழும்பு பயணமாகவுள்ளனர். - க

கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் மூடப்பட்டது!

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் நேற்று மூடப்பட்டது.

நேற்றுக்காலை கொழும்பு பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை தொடர்ந்து விஞ்ஞானபீடம் உடனடியாக மூடப்பட்டு, பொலிஸார் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டதாக அரசு அறிவித்தது.

இதேவேளையில் கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தை பெரும்பாலும் முற்றாகவே மூடிவிடுவதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தற்போது ஆலோசனை செய்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. -வி இ

மன்னார்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பேசாலை, வங்காலை, பள்ளிமுனை, பனங்கட்டிக்கொட்டு, தலைமன்னார் மேற்குப் பகுதி ஆகிய இடங்களிலிருந்தே தமிழ் மக்கள் இராணுவத்தினரால் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்த வீடுகளில் தற்போது இராணுவத்தினரும் பொலிஸாருமே பெருமளவில் தங்கியுள்ளனர்.

வங்காலையில் 57 வீடுகளிலும் பேசாலையில் 48 வீடுகளிலும் பள்ளிமுனையில் 83 வீடுகளிலும் மன்னார் மேற்குப் பகுதிகளில் 35 வீடுகளிலும் இராணுவமும் பொலிஸாரும் பலத்த காவலரண்களை அமைத்து தங்கியுள்ளனர்.

இந்தியாவிலிருந்து தமிழ் அகதிகள் தற்போது தம் மன்னார் வருவதினால் இவர்களை மீளக்குடியமர்த்துவது புனர்வாழ்வு அமைச்சின் அதிகாரிகளுக்கு இது ஒரு பெரும் பிரச்சினையாக இருக்கின்றது.

தாம் தற்போது தங்கியிருக்கும் வீடுகளிலிருந்து உடனடியாக வெளியேற முடியாது என்று இராணுவம் கூறிவிட்டது.

மன்னார் மாவட்டத்தில் இராணுவம் வெளியேறிய இடங்களில் தற்போது 15 ஆயிரம் மக்கள் மீளக்குடியேறியுள்ளார்கள். இவர்கள் தமது வீடுகளுக்கு ஏற்பட்ட சேதங்களை ஆதாரங்களுடன் குறித்து நஷ்டஈட்டுக்கு விண்ணப்பித்துள்ளபோதிலும், இதுவரை எவருக்கும் எந்த ஒரு நட்டஈடும் வழங்கப்படவில்லை.

இதேநேரம் இந்த மாவட்டத்திலுள்ள ஆளும்கட்சி, எதிர்க்கட்சிகளின் அரசியல்வாதிகள் தமது வீடுகளும் இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்து விட்டது எனக்கோரி லட்சக்கணக்கான ரூபாவை நஷ்டஈடாக பெற்றுள்ளனர்.

ஆனால் நஷ்டஈடு பெற்ற எந்த ஒரு அரசியல்வாதியின் வீடும் சேதம் அடையவில்லை.

மன்னார் மாவட்டத்தில் இராணுவம் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களை விட விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களே கூடுதலாக உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (வி-கி-இ)

பிரிட்டன் உதவியுடன் ஆங்கில மொழி பயிற்சி

(கொழும்பு)

இலங்கையில் புதிய ஆங்கில மொழிப் பயிற்சித்திட்டம் பிரிட்டனின் உதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ளது

92 லட்சத்து 80 ஆயிரம் ரூபா செலவிலான இப்பயிற்சித்திட்டத்திற்கு பிரிட்டனின் வெளிநாட்டு அபிவிருத்தி நிர்வாகப்பிரிவு நிதியுதவி வழங்கவுள்ளது.

இரண்டாண்டு காலப் பயிற்சியை கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் நிலையம் மேற்கொள்ளவுள்ளது.

பிரிட்டனில் புலமைப் பரிசில் பெற்றுச் செல்லவுள்ள இலங்கையர்களுக்கே இம்முன்னோடிப்பயிற்சி வழங்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. க-இ

திருமதி ஆரியரத்ன தலைமையில்

சர்வோதய குழு யாழ். வருகிறது

(யாழ்ப்பாணம்)

இலங்கை சர்வோதய சிரமதான சங்கத்தின் தலைவர் டாக்டர் ஏ. ரி. ஆரியரத்தினாவின் மனைவி கலாநிதி திருமதி ஆரியரத்தினா தலைமையிலான குழு ஒன்று நேற்று பலாலிக்கு வந்துள்ளது.

திருமதி ஆரியரத்தினாவின் தலைமையிலான இக்குழுவில் சர்வோதய சிரமதான சங்கத்தின் செயலாளர் திரு. ஜோனல் பெரேரா, திரு. தேவநேசன் நேசையா ஆகியோர் அடங்கியிருக்கின்றனர்.

இக்குழுவினர் எதிர்வரும் ஏழாம் திகதி திங்கட்கிழமை காலை யாழ். நகர் வருவார்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. -வி-இ

கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

புலிகளின்குரல் வானொலிக் கலைஞர்களுக்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு நல்லூரில் நடைபெறும். அனைத்து புலிகளின்குரல் வானொலிக் கலைஞர்களையும் இதில் கலந்துகொள்ளும்படி புலிகளின் குரல் பொறுப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ். மீன்பிடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற வருடம் ஐப்பசி மாதம், மேற்படி கல்லூரி மூடப்பட்டுவிட்டதாகவும், அங்கு கடமையாற்றிய ஊழியர்கள் அனைவரும் கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சு அறிவித்தது.

இந்த திடீர் முடிவை யாழ். அரச அதிபரும், ஊழியர்களும் மற்றும் கடல் தொழில் சங்கங்களும், பொதுநிறுவனங்களும் ஆட்சேபித்து அமைச்சுக்கு விண்ணப்பித்தனர். அன்றிலிருந்து இப்பயிற்சிக் கல்லூரி ஊழியர்களின் சம்பளங்களும் நிறுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. வி-இ

இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி குழுவினால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிச் சுற்றில் இன்றைய ஆட்டத்தில் ஞானமுருகன் பாடுமீன் கழகங்கள் மோதவுள்ளன. இப்போட்டி பி. ப. 3-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறும். இ-இ

செப்ரிசிமியா ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

செப்ரிசிமியா நோயினால் பீடிக்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த ஒருவர் நேற்று அங்கு மரணமானார்.

உடுவில் கிழக்கைச் சேர்ந்த கதிர்காமு இராசலிங்கம் (48 வயது) என்பவரே மரணமானவராவார்.